





# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி**

**மலர் 1** **இதழ் 12** **19 .03.2025**



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

ஆசார்ய தேவோ பவ

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. பொய் ஸாக்ஷி சொல்லாதே
2. வேதம் மறவேல்
3. ஆத்மா -உடல்
4. வேதம் என்பது ஒரு பெரிய மரம்
5. மந்த்ரம்
6. கோவிந்தனைப் பூஜியாதவர்கள்
7. வீடுமின் முற்றவும்
8. வரதனும் - சிறுவன் த்ருவனும்
9. ப்ரஹ்லாதன்- ஹிரண்யன் ஸம்பாஷனை
10. ஸ்வாமி தேசிகனின் அதிகாரசங்கிரஹம்
11. பகவானுக்குத் தொண்டு
12. ஸ்ம்ஸாரச் சூழலில் சிறந்த கருத்துக்களை உணர வேண்டும்

**************

# பராசரர்...விஷ்ணு புராணத்தில்

## பொய் ஸாக்ஷி சொல்லாதே

உண்மை தெரிந்திருந்தும், வ்யவஹார காலங்களில் ஸாக்ஷ்யம் சொல்லாதிருப்பவனும், உண்மைக்குப் புறம்பாக மாற்றி ஸாக்ஷ்யம் சொல்பவனும் 'கூடஸாக்ஷி' எனப்படுவர். இவர்களும் நீதி வழங்கும் ஸ்தானங்களில் இருந்து கொண்டே பக்ஷபாதத்தினால் நீதிக்குப் புறம்பாகத் தீர்மானம் வழங்கும் நீதிபதிகளும், பொய் சொல்லுபவர்களும் ரௌரவம் என்ற நரகத்தை அடைகின்றனர். 'ருரு' என்ற ஒருவகைக் கொடிய ம்ருகத்தினால் துன்புறுத்தப்படும் இடத்திற்கு 'ரௌரவம்' என்று பெயர். அதாவது கீழ்க்கூறிய பாபச் செயல்களைச் செய்தவர்களை இவ்விடத்தில் தள்ளி, ருரு என்ற ம்ருகத்தினால் கடிக்கச் செய்து யமபடர்கள் துன்புறுத்துவார்கள்.

## வேதம் மறவேல்

வேதத்தை நிந்திப்பவன், வேதத்தை விலைக்கு விற்பவன், அதாவது பணம் பெற்றுக் கொண்டு மற்றொருவனுக்கு வேதத்தைச் சொல்லிக் கொடுப்பவன், கூடத் தகாத பெண்களுடன் அதாவது மாமன் மனைவி, கீழ்ஜாதிப் பெண் முதலியோர்களுடன் கூடுபவன் - இவர்கள் அனைவரும் லவணம் என்னும் நரகத்தை அடைகின்றனர். உடலை வெட்டி வெட்டிக் காய்ச்சிய உப்பில் இட்டு வாட்டும் இடம் லவணம் என்பதாகும். வேதத்தை முழுவதும் அத்யயனம் செய்து விட்டுப் பின்பு மறந்து விடுபவனும் வேதத்தை நிந்திப்பவனாகவே கருதப்படுகிறார். ஆகையால் வேதத்தை ஓதிவிட்டு மறந்தவனுக்கும் இந்த நரகம் உண்டு. (வேதத்தை நாம் பிறருக்குத் தயையினால் சொல்லி வைக்க, அது கண்ட தார்மிகர்கள் தாங்களாகவே மனமுவந்து கொடுக்கும் காணிக்கைகளை ஏற்பது வேதத்தை விற்கும் குற்றத்தில் சேராது. 'இவ்வளவு கொடுத்தால் தான் வேதம் சொல்லித் தருவேன்' என்று முன்னதாகப் பேரம் பேசிக் கொண்டு வேதம் ஒதுவித்தலே வேதத்தை விற்கும் குற்றத்தில் சேரும்).

## ஆத்மா -உடல்

### ஜடபத்ரர் -அரசன் ஸம்பாஷனை

"பல்லக்கை நான் சுமக்கவில்லை; பல்லக்கும் என்மீது இல்லை உடல்தான் பல்லக்கைச் சுமக்கிறது. அது என்னை (ஆத்மாவை)க் காட்டிலும் வேறானது. பஞ்ச பூதங்களால் ஆனது அது. இந்த பஞ்ச பூதங்கள் முக்குணங்களின் ஏவலினால் இயங்குகின்றன இந்த இயக்கமும் கர்மாவே காரணமாக ஏற்படுகிறது" என்று தாங்கள் செய்த உபதேசம் என் காதில் பட்டதுமே என் மனம் என் வயமில்லை; இந்த பரமார்த்த விஷயத்தைக் கேட்பதையே விரும்பி நிற்கிறது.

## வேதம் என்பது ஒரு பெரிய மரம்

மைத்ரேய! வேதம் என்பது ஒரு பெரிய மரம் போன்றது. இதற்கு அநேக ஆயிரம் கிளைகள் உண்டு. அவை அனைத்தையும் விரிவாகக் கூறுதல் முடியாததொன்றாகும். ஆகையால், இவ் விஷயத்தைச் சுருங்கச் சொல்கிறேன்: கேள். 'கல்வி கரையில், கற்பவர் நாள் சில '. ஒன்றான வேதம் மிகப் பரந்திருந்தும் அதை அத்யயநம் செய்ய (ஓத) வேண்டியவர்களுக்கோ, உத்ஸாஹமும், தவம் முதலியன செய்து பெற்ற மஹிமையும், தரிக்கும் (மனதில் பதிய வைத்துக் கொள்ளும்) ஆற்றலும் மிகக் குறைந்துள்ளன. ஆயுளுங்கூடக் குறைந்த அளவில்தான் உள்ளது. இப்படிப்பட்டவர்களால் பரந்துள்ள வேதத்தை அத்யயனம் செய்ய முடியாதென்று கருதி,இவர்களுடைய ஹிதத்திற்காகவே எம்பெருமான் ஒவ்வொரு த்வாபர யுகத்திலும் வ்யாஸரூபியாக அவதரித்து, ஒன்றாய் இருந்த வேதத்தைப் பல பிரிவுகளாகச் செய்கிறான். எந்தத் திருமேனியை எடுத்துக் கொண்டு எம்பெருமான் வேத விபாகம் செய்கிறானோ அந்தத் திருமேனியுடன் கூடியிருக்கும் நிலையில்தான் வேதவ்யாஸன் என்ற பெயரைப் பெறுகிறான். 'வேதவ்யாஸ:' என்ற சொல்லே 'வேதத்தைப் பிரிப்பவன்' என்ற பொருளைத் தருகிறது. ஆகவே, 'வேதம் வகுத்தல்' என்ற செயல் காரணமாக ஏற்பட்ட பதவிப் பெயராகும் இது.

## மந்த்ரம்

"மந்த்ரம் என்பது ரஹஸ்யத்தில் ஆசார்யனிடமிருந்து மூன்றாமவர் அறியா வண்ணம் பெற வேண்டியதாகையால் மூலப் புத்தகத்தில் தன் முழு உரு குறிக்கப்படவில்லை. ஏட்டில் ஏறிய மந்த்ரம் ஏட்டுச் சுரைக்காய்போல்தான் ஆகும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. அதுபோல் ஏட்டில் ஏறிய மந்த்ரமும் பயன் தராது. உபதேசத்தின் மூலம் பெற்ற மந்த்ரங்களே பயன் தர வல்லன" என்பது இதனால் கூறப்பட்டதாயிற்று என்கின்றனர் வ்யாக்யானகாரர்கள்.

## கோவிந்தனைப் பூஜியாதவர்கள்

''கோவிந்தனைப் பூஜியாதவர்கள் எந்த உயர்ந்த ஸ்தானத்தையும் பெற முடியாது. அவனை ஆராதித்தால் அபிஷ்டங்களைப் பெறலாம் என்று மரீசி அருளிச் செய்கிறார். மற்றவர்களும் இவ்வாறே விஷ்ணு பூஜையின் சிறப்பைக் கூறி, அதுவே தக்க உபாயமென்கின்றனர் த்ருவனுக்கு, மஹரிஷிகள்.

## வீடுமின் முற்றவும்

"முதலில் மனதை வெளிப் பொருள்களிலிருந்து மீட்க வேண்டும். அதாவது அவற்றில் ஆசையை விட வேண்டும். பிறகு, அந்த மனதை பகவான் பக்கலிலே நிலைபெறச் செய்ய வேண்டும். மற்றைய சிந்தைகளை விட்டு பகவானுடைய சரணாரவிந்தங்களையே நினைக்க வேண்டும். அப்பொழுது ஜபிக்க வேண்டிய மந்த்ரம் ஒன்றுண்டு. அதையும் தவறாமல் ஜபிக்க வேண்டும். அந்த மந்த்ரம் 'த்வாதசாக்ஷர மஹாமந்த்ரம்' ஆகும். ''வ்யஷ்டி, ஸமஷ்டி ரூபமாய், ப்ரக்ருதி புருஷர்களைச் சரீரமாகக் கொண்ட சுத்த ஞானமயமான வாஸுதேவனை வணங்குகிறேன்" என்பது அந்த மந்த்ரத்தின் பொருள். இதை ஜபித்துத்தான் உன் தாதாவான ஸ்வாயம்புவமனு என்பவர் விரும்பிய செல்வத்தைப் பெற்றார். அவ்வாறே நீயும் பெறுவாய். இந்த மந்த்ரத்தை இடைவிடாது ஜபித்து வா" என்று அதை உபதேசித்தனர், மஹரிஷிகள்..

இந்த மந்த்ரத்தை நாரதர் உபதேசித்ததாக ஸ்ரீ பாகவதம் கூறுகிறது.

## வரதனும் - சிறுவன் த்ருவனும்

"உத்தானபாதனின் உத்தம புத்ரனே! உன்னுடைய தவத்தினால் நான் மிக மகிழ்ந்துள்ளேன். புறப் பொருள்களில் விருப்பின்றி, என்னிடத்திலேயே மனதைச் செலுத்தினாய். அதனால் ஸந்தோஷம் எய்திய நான், உனக்கு வரம் தர விழைந்து வந்துள்ளேன். உயர்ந்த வரங்களைப் பெறுவாய்" என்றான்.

## ப்ரஹ்லாதன்- ஹிரண்யன் ஸம்பாஷனை

ப்ரஹ்லாதன், "தந்தையே, அந்த விஷ்ணு என்னை மட்டும்தான் படைத்து நிலைக்கச் செய்து காக்கிறான் என்பதில்லை. எல்லா ப்ரஜைகளையுமே அவன் தான் படைக்கிறான்; அவன் தான் அவற்றை நிலைத்திருக்கச் செய்கிறான். பல சொல்லி என்ன? தங்களையும் அவன் தான் படைக்கிறான்; அவன் தான் நிலைக்கச் செய்கிறான். ஆகையால் அப்படிப்பட்ட விஷ்ணுதான் யாவர்க்கும் பரமேச்வரன். உண்மையை உணர்ந்து தெளிவு பெறுங்கள். வீணே எதற்காகக் கோபம் கொள்கிறீர்கள்?" என்றான்.


அஞ்சாமல் ஒவ்வொன்றிற்கும் உடனுக்குடனேயே பதிலுரைத்த பிள்ளையின் வார்த்தைகளைக் கண்டு ஹிரண்யன் வியக்கிறான். "துஷ்ட புத்தியை உடைய இவன் என் சொல்லைக் கேளாமல் மிக்க பாபத்தையே செய்கிறான். இவன் மனதில் எவனோ ஒருவன் புகுந்துள்ளான். அதனால்தான் இவன் இத்தகைய தகாத சொற்களைச்

சொல்லுகிறான். அப்படி இவனுள் புகுந்திருப்பவன் யாரோ தெரியவில்லையே?" என்கிறான் ஹிரண்யன்.

இதைக் கேட்ட ப்ரஹ்லாதன் தந்தையே நோக்கி, "அப்பா, நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே. **என் மனதில் ஒருவன் புகுந்துதான் இவ்வாறு என்னைப் பேச வைக்கிறான். அவன் தான் விஷ்ணு**. ஆனால், அவன் என் மனதில் மட்டும் புகுந்து இவ்வாறு செய்விக்கிறான் என்பதில்லை. என்னையும், உங்களையும், மற்றுமுள்ள அனைத்தையுமே மனதில் புகுந்து ஆட்டி வைப்பவனும் அவனேதான். அவரவர்களை அந்தந்தச் செயல்களைச் செய்விக்கிறான் அவன்" என்று விஷ்ணுவின் பெருமையைப் பரக்க விளக்கினான்.





## ஸ்வாமி தேசிகனின் அதிகாரசங்கிரஹம்-திருப்புட்குழி ஸ்ரீ ந்ரருசிம்ஹதாதாயார்ய மஹாதேசிகன் -உரை

1. எட்டும் இரண்டும் அறியாத எம்மை இவை அறிவித்து
எட்ட ஒண்ணாத இடம்தரும் எங்கள் அம்மாதவனார்
முட்ட வினைத்திரள் மாள முயன்றிடும் அஞ்சல் என்றார்
கட்டெழில் வாசகத்தால் கலங்காநிலை பெற்றனமே.

எட்டெழுத்துக்களைக் கொண்ட திருவஷ்டாக்ஷரம், த்வயம் சரம ச்லோகம் என்ற மூன்று திருமந்த்ரங்களையும் இவைகளின் பொருட்களையும் உணராத எங்கட்கு ஆசார்யர்கள் வாயிலாக உபதேசம் செய்வித்து எங்களால் அடையவே வியலாத மோக்ஷத்தைத் தந்திடும் கோவலனாய்ப் பிறந்த எம்பெருமான் கர்மங்கள் அனைத்தும் அழியும் வண்ணம் சரணாகதியில் ஈடுபடுவீர், பயத்தை அறவே விட்டுவிடுவீர்களெனக் கூறியருளினார். அவரருளிய சரம ச்லோகத்தால் கவலையற்ற நிலையை அடைந்தோம்.

2. ஓது மிரண்டை இசைத்து அருளால் உதவும் திருமால்
பாதமிரண்டும் சரணெனப் பற்றி நம் பங்கயத்தாள்
நாதனை நண்ணி நலந்திகழ் நாட்டில் அடிமை எல்லாம்
கோதில் உணர்த்தியுடன் கொள்ளுமாறு குறித்தனமே

வேதத்தில் இரண்டு வாக்யங்களாக த்வய மந்தரம் அத்யயனம் செய்யப்படுகின்றது. அவைகளை ஒன்றாகச் சேர்த்து நமக்களித்தவன் எம்பெருமான். அவனது இரு திருவடிகளையும் உபாயமாகப் பற்றி பெரியபிராட்டியின் கொழுணனான எம்பெருமானை நண்ணி ஆனந்தம் பொங்கி வழியும் பரமபதத்தில், நாம் கைங்கர்யம் செய்கிறோம். நாம் அனுபவிக்கிறோம் என்ற அஹங்காரமாகிய குற்றமற்ற உணர்வுடன் பெறும் வழியை த்வயத்தில் அனுஸந்தானம் செய்கிறோம்.

3. உண்மை உரைக்கும் மறைகளில் ஒங்கிய உத்தமனார்,
வண்மை அளப்பரிதாதலின் வந்து கழல் பணிவார்,
தண்மை கிடக்கத் தரமள வென்ற வியப்பில தாம்,
உண்மை உரைத்தனர் ஓரந்தவிர உயர்ந்தனரே.

வேதங்களின் இறுதியிலே உள்ள உபநிஷத்துக்கள் உண்மையான விஷயங்களையே விளக்கி உரைப்பன. அவைகள் புருஷோத்தமன் என உயர்த்திக் கூறும் எம்பெருமான் பெருமை இவ்வளவென்று அளவிட்டுக் கூறவியலாது. அவனிடம் சரணாகதி செய்வதர்களிடையே ஜாதி போன்றவைகளால் தாழ்மை இருப்பினும் அவைகளை நோக்கலாகாது. அவர்களது பெருமையினையும் அளவிட்டுக் கூறவியலாது என்ற உண்மையை மிகச் சீரியரான நமது ஆசாரியர்கள் பக்ஷபாதமின்றி உபதேசித்தருளினர்.

****************************************************************************************************

# பகவானுக்குத் தொண்டு
**.....வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி**

1. ஒரு நல்ல செடி முளைக்கும்போது அருகே களை வளர்ந்து கெடுக்கும். உடனுக்குடன் களையைப் பறித்து விட வேண்டும்.

   அது போல் பகவானுக்குத் தொண்டு என்ற நல்ல செடியை, 'என் ஆனந்தத்துக்காக' என்ற களை கெடுக்கப் பார்க்கும். அதை அப்போது வெட்டி விட வேண்டும். கோவிலில் பலர் கூடி கைங்கர்யம் செய்யும்போது, அது என் ஆனந்தத்துக்காக என்று நினைத்தால் போட்டியும் சண்டையும் வரும். பகவானின் முக மலர்ச்சிக்காக என்று உணர்ந்தால் சண்டை வராது.

   "மற்றை நம் காமங்கள் மாற்று" என்று ஆண்டாள், களையில்லாத கைங்கர்யத்தை வேண்டினாள். த்வய மந்த்ரத்தின் இரண்டாவது வாக்யத்தில் "ஶ்ரீமதே நாராயணாய நம:" என்ற இடத்தில் "நம:" என்னும் சொல், கைங்கர்யத்தில் “என் ஆனந்தத்துக்காக அல்ல" என்று களையைப் போக்கச் சொல்கிறது. இக்கருத்தை உணர்ந்த லக்ஷ்மணன், பர்ணசாலை அமைப்பதில் தன் ஆனந்தம் என்ற குற்றம் வந்து விடுமோ என்று வருந்தினார்.

   அடியேன் என்று சேஷத்வ உணர்ச்சியோடு பகவானுக்குத் தொண்டு செய்து, அதனால் அவர் ஆனந்தப்பட, அது கண்டு நாம் ஆனந்தப்படலாம்.

2. ஒரு ரஸமான செய்தி சொல்வர். காட்டில் நதியைத் தாண்ட வேண்டி வந்தால், லக்ஷ்மணன் மரக்கட்டைகளால் மிதவை செய்து ஸீதையையும், ராமனையும் ஏற்றிச் செல்வார். இதைக் கண்டராமன் வியந்து, "லக்ஷ்மணா! நாம் இருவரும் ஒன்றாகத்தானே வஸிஷ்டரிடம் பயின்றோம்.! நீ மட்டும் மிதவை கட்ட எப்போது கற்றாய்?" என்று கேட்டார்.

   லக்ஷ்மணன் சிரித்துக் கொண்டே "ராமா ! நீ பறவையான ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்தாயே! அது என்ன வஸிஷ்டரிடம் கற்றதா ! குருகுலத்தில் கற்காவிட்டாலும் ஸ்வாமியான உனக்குரியதை நீ செய்தாய். தாஸனான எனக்குரியதை நான் செய்தேன்" என்று பதில் கூறினார்.

   'ப்ரீதியால் உந்தப்பட்ட கைங்கர்யம்' என்பதே ஜீவாத்மாவுக்கு சிறப்புத் தரும். அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் லக்ஷ்மணன். இதுவே பிறவியின் பயன்.

3. परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ।।

பரித்ராணாய ஸாதூநாம் விநாயாய ச துஷ்க்ருதாம் |
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||

பகவான் ஶ்ரீ க்ருஷ்ணர் பகவத் கீதையில் தன் அவதாரத்தின் பயன்களைக் கூறுகிறார். ஸாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களை அழித்தல், தர்மத்தை நிலை நாட்டுதல் ஆகிய மூன்றுமே முக்கியமான பயன்கள் இவை பொதுவாக அனைத்து அவதாரங்களுக்கும் உள்ள பயன்கள். ஶ்ரீ ராமரும், குஹன், ஜடாயு, விபீஷணன் போன்ற ஸாதுக்களை ரக்ஷித்தார். ராவணன், கும்பகர்ணன் போன்ற துஷ்டர்களை அழித்தார். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல், தாய் தந்தை சொல்லுக்குக் கீழ்ப்படிதல், உண்மை பேசுதல், நேர்மை தவறாது நடத்தல் போன்ற பொதுவான (ஸாமாந்ய) தர்மங்களை நிலை நாட்டினார். அத்தோடு நிற்காமல், தானும் தம்பிகளுமாகச் சேர்ந்து சிறப்பான (விசேஷ தர்மங்களை) நிலை நாட்டினார்.



# ஸ்ம்ஸாரச் சூழலில் சிறந்த கருத்துக்களை உணர வேண்டும்

இது கலியுகம். த்யானம், யாகம், அர்ச்சனை போன்றவற்றைச் செய்து உய்ய ஏற்ற காலமன்று."கலௌ ஸங்கீர்த்ய கேசவம்" என்பதால் பகவந்நாம ஸங்கீர்த்தனமே உய்வதற்குரிய வழியாம். இதனை "ஆஸ்ய ஜாநந்தோ நாமசித்விவக்தந" என்று வேதமும் கூறுகிறது. வெறும் நாமஸங்கீர்த்தநம் மட்டும் மோக்ஷத்தை ஸாக்ஷாத் (நேரடியாக) அளிக்காது. அவரவர்க்குரிய தர்மங்களை ஓரளவுகுறைவற அனுஷ்டித்து நாமஸங்கீர்த்தனம் செய்வதே சாலச்சிறந்தது.

நமது ஸம்ப்ரதாயத்தின் சிறந்த கருத்துக்களை அறிய வேண்டும்.

ஸ்ரீமாந் நாராயணோ **ந: பதிரகிலதநு: முக்தி தோமுக்த போக்ய:** என்று ஸ்வாமி தேசிகன் அருளியதற்கேற்ப போக்ய பரமபுருஷன் திருமால். உலகெலாம் அவனுக்குடல். அவனே மோக்ஷத்தைத் தரவல்லவன். முக்தர்களால் அனுபவிக்கப்படுபவனும் அவனே என்பது போன்ற சிறந்த கருத்துக்களையறிந்து நல்லாசிரியரை நாடி அங்கபஞ்சகங்களுடன் சரணாகதி செய்தால் பிறவிப்பிணி யகற்றலாம்.

இது கம்ப்யூட்டர் யுகம். மனிதனுக்குத் தேவை மிகுதியாகிவிட்டது. ஓய்வே இல்லை. நகரத்தில் ஒண்டி வாழ வேண்டிய நிலை. இறுதிவரை ஓடியோடி உழைத்துச் செல்வத்தைத் திரட்ட வேண்டியநிலை. இவர்களுக்கு ஓய்வே இல்லாதபோது நல்லாசிரியர்களை நாடிப் பணிந்து . நற்கருத்துக்களையறிய நேரமேது. ஆனால் நேரமில்லை என்று விட்டு விடலாமா? கடலில் அலை ஓய்வதெப்போது

**வ்யாப்ருதேநாபி மநஸா விஷ்ணு: ஸேவ்யோந்தராந்தரா**
**மேதி பத்தோ ப்ராம்யமாண: காஸ க்ராஸம் கரோதி கௌ:**

நெல்லைக் களத்தில் அடித்தபின்னர் தாளில் ஒட்டியுள்ள நெல்மணிகளைப் பிரிக்கவும் தாள் நன்கு சமைந்து வைக்கோலாகவும், 5, 6 மாடுகளைப் பிணைத்து தாள்களைப் பரப்பி சுற்றி வரச்செய்கிறோம்.
இதனை கொச்சைத் தமிழில் "புணைகட்டி ஓட்டுதல்" என்பர். அப்போது தாளின் மீது சுற்றி வரும் மாடுகள் ஓய்வெடுக்கும் போது வைக்கோல் உண்ணலாம் என்றிராமல் நடுநடுவே வைக்கோலை எடுத்துத் தின்கின்றன.
அவ்வாறே ஸ்ம்ஸாரச் சூழல் எப்படியாயினும் இடையிடையே மறுமைக்குரிய சிறந்த கருத்துக்களை உணர வேண்டும்.

--கொத்திமங்கலம் ரகு கோபால சக்ரவர்த்தி (நங்கைநல்லூர்)